# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம்

---

*(2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2013*, பெப்புருவரி மாதம் 15 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 5.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம்**

[2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 30/2012

**2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அதன் (2அ) என்னும் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"(2அ) எவரேனும் பயங்கரவாதிக்கு, பயங்கரவாதிகளுக்கு அல்லது பயங்கரவாத ஒழுங்கமைப்புக்குப் பொருள் வகையான ஆதரவை அல்லது மூலவளங்களை நேரடியான அல்லது நேரடியாகவல்லாத வழிவகைகள் மூலம் சட்டவிரோதமாகவும் வேண்டுமென்றும் வழங்குகின்ற அல்லது வழங்குவதற்குச் சதிசெய்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்." ;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில், "ஓராம் பந்தியில் அல்லது (2) ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இப்பிரிவின் (1) ஆம்

2-PL 006887 -1115 (2013/01)

உட்பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் அல்லது (2அ) என்னும் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்''; அத்துடன்

(3) அதன் (4) ஆம் உட்பிரிவில், ''இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது (2) ஆம் உட்பிரிவின் கீழான'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, (2) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது (2அ) என்னும் உட்பிரிவின்கீழான'' என்னும் சொற்களையும் எண் களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4ஊ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் ''நீதிமன்றத்தால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதியொன்றுக்குள் அத்தகைய பெறுமதியான குற்றப்பணமொன்றைச் செலுத்துமாறு அவருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் அத்தகைய பெறுமதியைக் குற்றப்பணமொன்றாகச் செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற் றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில், ''3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அல்லது (2)ஆம் உட்பிரிவின் கீழான தவறொன்றின்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக,''3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான, (2) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது (2அ) என்னும் உட்பிரிவின்கீழான தவறொன்றின்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ''ஆள்'' என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தினை உடனடுத்துப் பின்னர் பின்வரும் வரைவிலக்கணத்தினை உட்புகுத்துவதன் மூலமும் :-

" "பயங்கரவாதி" என்பது -

(அ) பயங்கரவாதச் செயலொன்றை நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ மற்றும் வேண்டுமென்று புரிகின்ற அல்லது புரிவதற்கு எத்தனிக்கின்ற ;

(ஆ) பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதில் உடந்தையாளரொருவராகப் பங்குபற்றுகின்ற ;

(இ) பயங்கரவாதச் செயலொன்றை ஒழுங்கு செய்கின்ற, அதனைப் புரியுமாறு பணிக்கின்ற அல்லது அதனைப் புரிவதில் உடந்தையாயிருக்கின்ற அல்லது உதவி செய்கின்ற ; அல்லது

(ஈ) பங்களிப்பானது வேண்டுமென்றும் மற்றும் பயங்கரவாதச் செயலை முன்னெடுத்துச் செல்லும் இலக்குடனும் அல்லது குழுவின் பயங்கரவாதச் செயலொன்றைப் புரிவதற்கான உட்கருத்துப் பற்றிய அறிவுடனும் செய்யப்படுமிடத்து, பொது நோக்கமொன்றுடன் செயலாற்றுகின்ற ஆட்கள் குழுவினால் பயங்கரவாதச் செயலொன்று புரிவதில் பங்களிக்கின்ற,

எவரேனுமாள் எனப் பொருள்படும் ; ";

(2) "பயங்கரவாதச் செயல்" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தினை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

" "பயங்கரவாதச் செயல்" என்பது -

(அ) இச்சட்டத்திற்கான 1 ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பொருத்தனைகளுள் ஏதேனுமொன்றின் நோக்கெல்லைக்குள்

அல்லது வரைவிலக்கணத்தினுள் தவ றொன்றாக அமைகின்ற ஒரு செயல் ;

(ஆ) ஆயுதமேந்திய மோதல் நிலைமையொன்றில் அல்லது வேறு வகையாக, பொதுமகன் ஒருவருக்கு அல்லது பகைமைகளில் தீவிரமாகப் பங்கெடுக்காத வேறெவரேனு மாளுக்கு மரணத்தை அல்லது பார தூரமான உடலூறுபாட்டை விளைவிக்கும் உட்கருத்துக் கொண்டதும் மற்றும் அத்தகைய செயலின் நோக்கம், அதன் தன்மையினால் அல்லது சந்தர்ப்பத்தினால் ஏதேனும் செயலைச் செய்யுமாறு அல்லது செய்யாது தவிர்க்குமாறு ஒரு குடிசனத்தை அச்சுறுத்து வதாக அல்லது ஓர் அரசாங்கத்தை அல்லது சர்வதேச ஒழுங்கமைப்பை வலுக்கட்டாயப் படுத்துவதாக உள்ள வேறேதேனும் செயல் ; அல்லது

(இ) (i) அரசாங்கத்தை செல்வாக்கிற்கு உட்படுத்துவதற்கென அல்லது பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரைச் செயலிழக்கச் செய்வதற்கென வடிவமைக்கப்பட்டதும் ; அத்துடன்

(ii) அரசியல், மத அல்லது இலட்சியம் சார்ந்த நோக்கமொன்றை முன் னெடுத்துச் செல்லும் நோக்கத் திற்கென செய்யப்பட்டதுமான,

பயன்பாடு அல்லது அச்சுறுத்தலின் செயற் பாடாகும் என்பதுடன், அத்தகைய செயற் பாடானது -

(அஅ) ஆளொருவருக்கெதிராக பார தூரமான வன்முறையை ஈடு படுத்தும் ;

(ஆஆ) ஆதனத்திற்குப் பாரதூரமான சேதத்தை ஈடுபடுத்தும் ;

(இஇ) செயலைப் புரிகின்ற ஆளைத் தவிர்ந்த வேறோர் ஆளின் உயிருக்கு ஆபத்தை விளை விக்கும் ;

(ஈஈ) பொதுமக்களின் அல்லது பொதுமக்களின் ஒரு பகுதியினரின் சுகாதாரத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு பாரதூரமான ஆபத்தை உருவாக்கும் ; அல்லது

(உஉ) இலத்திரனியல் முறைமை யொன்றில் பாரதூரமாக தலையிடுதலுக்கு அல்லது பாரதூரமாகச் செயலிழக்கச் செய்வதற்கென வடிவமைக் கப்பட்ட,

செயற்பாடானதுமாகும் எனப் பொருள் படும்.”.

**6**. இச்சட்டத்தின் சிங்களை, தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்